இராது என்ற் காரணத்தால் மீதி இருக்கிற வினாக்களும் அவற்றுக் கான விடைகளும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் அச்சிடப் பெறும் என்று தெரிவித்தேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, அந்தக் கேள்விகள் மிகவும் முக்கியமானவை. உடுக்குறியிட்ட வினாக்கள் என்று தாங்கள் அனுமதித்துவிட்டீர்கள். அவை யிலே அவை எடுக்கப்பட்டால்தான் நாங்கள் துணை வினாக்கள் கேட்க முடியும். ஆகவே, இன்றைக்கு இல்லா விட்டாலும் நாளையோ, அதற்கு அடுத்த நாளோ அல்லது வேறு ஒரு நாளோ எடுத்துக் கொள்ளும் வகையில் தங்களுடைய முடிவை மறுபரி சீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேவையில்லை. நாளைக்கு வேறு கேள்விகள் வருகின்றன. மேலும் வினாக்கள்-விடைகள் நேரத்தை 10.00 மணிக்குமேல் நீட்டிப்பது சரியல்ல என்றும் கருதுகிறேன்.

3. தகவல் கோரல்.

உறுப்பினர் கோடுத்துள்ள அறிவிக்கை.

திரு. அ. ரகுமான்கான் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கு அனுமதி மறுக் கப்பட்டு விட்டது. ஆகவே அதைப்பற்றி பேச வேண்டாம். என் அனுமதியின்றி பேசப்பெறுபவை எதையும் அவைக்குறிப் பிலே ஏற்ற வேண்டாம்.

திரு. துரைமுருகன் :

* * *

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற் றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1981 ஏப்ரல் 22

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இந்த அவையைப் பொறுத்தவரையில் இறுதித் தீர்ப்பு அளிக்க வேண்டியது தாங்கள். தங்கள் தீர்ப்புக்கு எந்தவிதமான நோக்கமும் கற்பிப்பது சரியல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் பேரவை விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டு இந்த அவையின் மரபைக் காப்பாற்றவேண்டியது தான் முறை. மரபுகளை மீறி நடப்பது சரியல்ல. பேரவைத் தலைவர் கொடுத்த தீர்ப்புக்குப் பணிந்து சபையின் மரபைக் காப்பாற்ற வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரைமுருகன் : * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இசைவு மறுப்பதற்கு பேரவையின் விதிகளில் இடம் இருக்கிறது. பொதுவாக நான் சில முறைகளைக் கடைப்பிடிக்கிறேன். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்தாக வேண்டும். (குறுக்கீடு—கூச்சல்—குழப்பம்) இது பற்றி எதையும் அவைக் குறிப்பிலே ஏற்றாதீர்கள்.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, * * *

நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

[முற்பகல் 10.10]

* * *

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சித்தன், திரு. பலராமன் ஆகியோர்களும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறார்கள். அதை எடுத்துக்கொள்வீர்கள் என்று நாங்கள் நினைத்தோம்.

ஆனால் இன்றைக்கு திடீர் என்று எடுத்துக்கொள்ள சம்மதிக்காததன் காரணமாக எங்களுடைய உரிமையை மறுத்திருக்கிறீர்கள் என்பதற்காகவும், * * * *

நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

[காங்கிரஸ்(இ) உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1981 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் சுந்தரராஜ் அவர்கள் பேசியதில் ** என்று சொன்னதை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் எஸ். ஆண்டித்தேவர், என். எஸ். வி. சித்தன், செ. சிவசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், என். வரதராஜன் ஆகியோர் ''மதுரை மாவட்டம், மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் 26—3—1981 அன்று மாணவர்களிடையே ஏற்பட்ட கோஷ்டிச் சண்டையில் ஒரு மாணவர் கண்ணிழந்தும், சிலர் காயம்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டும் உள்ள நிலையிலும், கல்லூரி மூடப்பட்டுள்ள நிலையிலும், அங்குள்ள பதட்டநிலை குறித்து விவாதிக்க, பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய ஏன் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 26—3—1981 ஆம் நாளன்று மேலூர் அரசினர் கலைக் கல்லூரியில் இரு கோஷ்டி மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒரு மாணவர் பி. காம் வகுப்பில் கடைசி ஆண்டு படிப்பவர், அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவருடைய ஒரு கண் அன்றே நீக்கப்பட்டு, ஒரு கண் இழந்தவராக ஆக்கபட்டிருக்கிறார். 3 மாணவர்கள படுகாயத்தோடு மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பல மாணவர்கள் மீது கிரிமினல் வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. கல்லூரி மூடப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலைமைகள் தமிழகம் முழுவதும் பரவி இருக்கிறது. அது அரசுக்கும் தெரியும். கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்கள் மத்தியிலே இப்படிப் பூசல்கள் பல வாராக ஏற்படுவதும், அது சம்பந்தமாக அங்கே இருக்கக்கூடிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.